**முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை**

முன்னிலை – **திருமதி பி. சுதா, பி.காம்., பி.எல்.,**

முதன்மை சார்பு நீதிபதி, மயிலாடுதுறை.

திருவள்ளுராண்டு 2056, விசுவாவ வருடம் பங்குனி மாதம் 11–ம் நாள்

2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 25–ஆம் நாள் புதன்கிழமை

**CNR.No.TNMY03-001737-2024**

**அசல் வழக்கு எண்.191/2024**

விஜயா பேங்க் தற்போது பேங்க்
ஆப் பரோடா, மயிலாடுதுறை
அதன் துணை மேலாளர் மூலமாக ...வாதி

/எதிர்/

1. G.ஜெகதீஸ்வரி,
2. K.கோபி. ...பிரதிவாதிகள்

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் கோப்புக்கு எடுக்கப்பட்டு வாதிக்காக வழக்கறிஞர் திரு.கே.அழகானந்தன், அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகளுக்காக வழக்கறிஞர் திரு. கே.இளையராஜா, அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் Written Statement தாக்கல் செய்யாத காரணத்தினாலும், பிரதிவாதிகளை நீதிமன்றத்தில் அழைக்கும் போது ஆஜராகாத காரணத்தினாலும் பிரதிவாதிகளை தோன்றாதரப்பினர்களாக கருதப்பட்டு, வாதி தரப்பு சாட்சியங்கள் 23.03.2026–ம் தேதி இறுதி விசாரணை செய்யப்பட்டு, வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டு, இதுநாள் வரையில் எனது பரிசீலனையில் வைத்து, இன்றைய தினம் இந்நீதிமன்றம் கீழக்கண்டவாறு வழங்கும்.

**தீர்ப்புரை**

வாதி வங்கிக்கு பிரதிவாதிகள் தாவா தொகை ரூ.1,03,571/–யும், அதற்குரிய பின் வட்டியையும், செலவுத் தொகையும் கொடுக்க உத்தரவிட கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. வாதி வழக்குரையின் சுருக்கம் பின்வருமாறு:–**

பிரதிவாதிகள், வாதி வங்கியில் கடந்த 10.06.2015 அன்று பயிர் கடனாக ரூ.1,05,000/– பெற்றுள்ளார்கள் என்றும், பிரதிவாதிகள் மேற்படி கடனுக்கு அன்றைய தினமே கடன் தொகையை 10.95% வட்டியுடன் திருப்பி செலுத்துவதாக உறுதி கூறி கடன் விண்ணப்பம், கொதுவை ஒப்பந்தம், கடன் ஏற்பாட்டு கடிதம் ஆகியவை எழுதிக்

கொடுத்துள்ளார்கள் என்றும், 2ம் பிரதிவாதி அந்த கடனுக்கு உத்தரவாதம் அளித்துள்ளார். பின்னர், கடனைப் புதுப்பிக்க கடன் உயிர்ப்பு கடிதம் எழுதிக்கொடுத்துள்ளார்கள். ஆனால் பலமுறை கோரிக்கைகள் வைத்தபோதிலும் பிரதிவாதிகள் கடன் தொகையை செலுத்த முன்வரவில்லை.

அவ்வப்போது பிரதிவாதிகளின் கணக்கில் வழக்கமான வட்டி விகிதத்துடன் பிரதிவாதிகளிடமிருந்து செலுத்த வேண்டிய தொகையை வாதி கணக்கிடப்பட்டு 22.07.2022 ஆம் தேதியிட்ட வங்கி கணக்கு பட்டியலின்படி மொத்தம் ரூ.1,03,571/-பாக்கியுள்ளது. ஆகையால் தாவா தொகையும், அதற்கு பின் வட்டியையும், செலவுத்தொகையையும் பிராதுபடி வாதி வங்கிக்கு பிரதிவாதிகள் வழங்கிட உத்தரவு பிறப்பிக்க வேண்டி வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

**4. இவ்வழக்கில் தீர்வு காண வேண்டிய பிரச்சினைகள்:-**

வாதி தாக்கல் செய்த தாவா செலவுத்தொகையுடன் அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

தீர்வு:-

5. வாதி வங்கியின் முதன்மை மேலாளருக்கு கொடுத்த பொது அதிகாரப் பத்திரம் வா.சா,ஆ.1 ஆகவும், 10.06.2015 தேதியிட்ட 1ம் பிரதிவாதி வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்த கடன் விண்ணப்பம் வா.சா.ஆ.2 ஆகவும், 10.06.2015 தேதியிட்டு 1ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த Loan agreement cum Hypothecation Deed வா.சா.ஆ.3 ஆகவும், 10.06.2015 தேதியிட்டு 2ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த Letter of Guarantee வா.சா.ஆ.4 ஆகவும், 07.06.2018 தேதியிட்டு 1ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த Letter of Acknowledgement of Debt வா.சா.ஆ.5 ஆகவும், 17.07.2020 தேதியிட்டு பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த Letter of Acknowledgement of Debt வா.சா.ஆ.6 ஆகவும், 29.05.2023 தேதியிட்டு 1ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த Letter of Acknowledgement of Debt வா.சா.ஆ.7 ஆகவும், 18.07.2024 தேதியிட்ட வாதி வங்கியில் தாக்கல் செய்த கணக்கு பேரேட்டு நகல் வா.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. வாதி வங்கியின் முதன்மை மேலாளரான வா.சா.1, தாவா சங்கதிகளை அனுசரித்து சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி வாதி தரப்பு சான்றாவணங்களின் அடிப்படையில் வாதி வங்கியில் பிரதிவாதிகள் ரூ.1,05,000/- பயிர்கடனை

பெற்றுக்கொண்டு அதற்கு கடன் விண்ணப்பம், கொதுவை ஒப்பந்தம், ஏற்பாட்டு கடிதம் ஆகியவை எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்பது தெரியவருகிறது. எனவே. வாதி வங்கியில் பிரதிவாதியின் கணக்குப்பட்டியல் வா.சா.ஆ.8ல் இருந்து பிரதிவாதிகள் வாங்கிய கடனின் அடிப்படையில் தாவா தொகை வாதிக்கு சேர வேண்டியுள்ளது என்பது தெரியவருவதால் பிரதிவாதிகள் தாவா கடனின்படி தாவா தொகையை செலுத்த கடமைப்பட்டுள்ளார்கள் என்பதை அறியமுடிகிறது.

7. இந்நிலையில் பிரதிவாதிகள் அழைப்பாணையை பெற்று கொண்டும், நீதிமன்றத்தில் பிரதிவாதிகள் தரப்பில் யாரும் ஆஜராகாமல் இருந்த நிலையில் மறுதரப்பில்லா வாதியின் வழக்கு அவர் முன்னிலைப்படுத்திய வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களின் படி நிரூபிக்கப்பட்டுள்ளதால் வாதியின் வழக்கு கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படுகிறது. வாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில், வாதி தாவாவில் கோரும், பரிகாரங்கள் பெற தகுதியானவர் என்று இப்பிரச்சினைக்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**இறுதியாக,**

8. வாதி தாக்கல் செய்த தாவா செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு தாவா தொகையான ரூ.1,03,571/- மற்றும் அந்த கடனின் அசல் தொகையான ரூ.1,05,000/-த்திற்கு தாவா தாக்கல் செய்த தேதியிலிருந்து தீர்ப்பு தேதிவரை 9 சதவீதம் வட்டியும், தீர்ப்புத்தேதியிலிருந்து தொகை செலுத்தும் வரை 6 சதவீத வட்டியும் சேர்த்து கணக்கிட்டு கொடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்தீர்ப்புரையானது என்னால் தட்டச்சரிடம் நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் படித்து சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று (25.03.2026) அவையறிய பகரப்பட்டது.

SUDHA P

Digitally signed by SUDHA P
Date: 2026.03.25 18:20:12 +0530

**முதன்மை சார்பு நீதிபதி,**
**மயிலாடுதுறை.**

**<u>பின் இணைப்பு:–</u>**

<u>வாதி தரப்பு சாட்சி</u>

வா.சா. 1. வின்செண்ட் பவுல் (வாதி வங்கியின் முதன்மை மேலாளர்)

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:–</u>

| வ.எண். | தேதி | ஆவண விபரம் | ஷரா |
|---|---|---|---|
| வா.சா.ஆ 1 | –– | மேலாளருக்கு கொடுத்த பொது அதிகாரப்பத்திரம். | அசல் |
| வா.சா.ஆ. 2 | 10.06.2015 | கடன் விண்ணப்பம். | அசல் |
| வா.சா.ஆ. 3 | 10.06.2015 | Loan agreement cum Hypothecation Deed | அசல் |
| வா.சா.ஆ. 4 | 10.06.2015 | Letter of Guarantee Deed | அசல் |
| வா.சா.ஆ. 5 | 07.06.2018 | பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த Letter of Acknowledgement of Debt | அசல் |
| வா.சா.ஆ. 6 | 17.07.2020 | பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த Letter of Acknowledgement of Debt | அசல் |
| வா.சா.ஆ. 7 | 29.05.2023 | பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த Letter of Acknowledgement of Debt | அசல் |
| வா.சா.ஆ. 8 | 18.07.2024 | பிரதிவாதியின் வங்கி கணக்கு பட்டியல் . | சான்றிட்ட நகல் |

SUDHA P

Digitally signed by SUDHA P
Date: 2026.03.25 18:20:01 +0530

**முதன்மை சார்பு நீதிபதி,**
**மயிலாடுதுறை.**

*முதன்மை சார்பு நீதிமன்றம்,*
*மயிலாடுதுறை.*
*நேரிய/வரைவு உத்தரவு*
*ஓ.எஸ்.191/2024*
*நாள்.25.03.2026*